## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 476/2016

நாள் 16.07.2025

DW1 – வெங்கடாசலம்

த/பெ – லேட்.பெரிய முருகப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of July 2025.)**

குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் 2–ம் பக்கத்தில் அவருக்கு 30.05.1930–ம் தேதியிட்ட கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் கொடுப்பதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.12 ஆவணத்தில் எனது பெரியப்பா கந்தசாமி கவுண்டர், நஞ்சப்ப கவுண்டர் மக்கள் கருப்ப கவுண்டர், சின்னிய கவுண்டர் ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.12 கிரைய ஆவணத்தில் 3–ம் தாளில் கிரையம் பெற்றவருக்கு மேற்படி கிராமத்தில் வேறு பட்டா பூமிகள் கிடையாது என்ற வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 கிரைய ஆவணத்தில் சர்வே எண்.49/3, 54/2, 55/2, 56/2 காலைகளில் 4.42 ஏக்கர் பூமியையும், சர்வே எண்.55/1– சாலையில் பொதுவில் பாதியையும் கிரையம் பெற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெரிய முருகப்ப கவுண்டர் பி.வா.சா.ஆ.1–ன் படி பெற்ற கிரைய ஆவணத்தில் 49/3, 54/2, 55/2, 56/2, 57/3, 57/4, 54/1 ஆகிய 7 காலைகளில் 6.95 ஏக்கர் சொத்து கிரையம் வாங்கியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதனால், வா.சா.ஆ.12 கிரைய ஆவணத்தில் இல்லாத சொத்துக்களை பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் மோசடியாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால்

சரியல்ல. அதனால் தான், உடனடியாக அ.வ.எண்.264/1962 என்ற வழக்கை நாங்கள் தாக்கல் செய்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் சொத்தை விற்பவரின் பெயரில் உள்ள முன் ஆவணங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த முன் வழக்கில் தாவா பிராதுவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு சொத்துக்களை விற்ற நஞ்சுக்குட்டி கவுண்டர் மகன் கந்தசாமி கவுண்டர் என்பவரை அந்த முன் வழக்கான அ.வ.எண்.264/1962 வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த பாக தாவாவானது ஒருதலைபட்சமாக தான் 27.10.1965–ம் தேதியில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல்நிலை தீர்ப்பாணை ஏற்படுவதற்கு முன்பாகவே வாதி கடந்த 22.04.1964–ம் தேதியில் சொத்தை கிரையம் வாங்கி விட்டார் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் சம்மந்தமில்லாத குமாரசாமி என்பவரை 17.08.1965–ம் தேதியில் IA.No.1224/1965–ன் படி தரப்பினராக கட்சி சேர்த்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி வீதம் வாதி 22.04.1964–ம் தேதியில் கிரையம் பெற்ற விபரம் எங்களுக்கு நன்கு தெரிந்திருந்தும் வாதியை கட்சி சேர்த்தால் நாங்கள் மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ள விபரம் தெரிய வந்துவிடும் என்பதால் தான் வாதியை கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு கிரையம் கொடுத்த கந்தசாமி கவுண்டர் 1–ம் வாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பாகவே 12.09.1952–ம் தேதியில் தாவா சொத்துக்களை சின்னிய கவுண்டர் என்பவருக்கு அடமானம் வைத்துள்ளார் என்றும் அந்த அடமான பத்திரம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரியல்ல. அதனால், வாதியையும், வாதிக்கு கிரையம் கொடுத்த கந்தசாமி

கவுண்டரையும் கட்சி சேர்க்காமல் அ.வ.எண்.264/1962 வழக்கில் பெற்ற முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அந்த பாக தாவாவில் ஏற்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணமாக பதிவு செய்யவும் இல்லை, அதனைத்தொடர்ந்து வேறு ஆவணங்கள் எதுவும் ஏற்படவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அது மோசடியாக பெறப்பட்ட தீர்ப்பாணை என்பதால் தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.19, பி.வா.சா.ஆ.20, பி.வா.சா.ஆ.21 பட்டா பாஸ்புத்தகங்களில் வாதி மயங்காத்தாள் என்ற பெயர் கூட்டுப்பட்டாதரராக உள்ளது என்றால் அந்த மயங்காத்தாள் என்ற பெயர் கொண்ட நபர் வாதி கிடையாது, அந்த மயங்காத்தாள் என்பவர் கந்தசாமி கவுண்டரின் மனைவியின் உடன்பிறந்த அக்கா ஆவார்.

2. நான் சொல்வது பொய் என்றும், இந்த வழக்கின் வாதி மயங்காத்தாள் பெயர் தான் மேற்படி கூட்டுப்பட்டாவில் இருந்து வருகிறது என்றும், நான் இந்த வழக்கிற்காக வேண்டி அந்த மயங்காத்தாள் என்பவர் வேறு நபர் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பெயரில் தாவா சொத்திற்கு நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி பெயரில் உள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மோசடியானது என்று நாங்கள் சொல்லியுள்ள நிலையில் அந்த கிரைய ஆவணத்திற்கு எதிராக எவ்வித பரிகாரமும் நாங்கள் கோரவில்லை என்றால் அந்த கிரைய ஆவணம் அமலுக்கு வரவில்லை. தாவா சொத்தில் வாதிக்கு கூட்டுப்பங்குரிமை உள்ளது என்றும், அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5 அடங்கல் கணக்குகள் மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.16 18:57:41 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**